DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 543/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

-----------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சகுந்தலாதேவி |
| Father's Name (or) Husband Name | : | க/பெ.ஈஸ்வரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A 1 to A3 present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 29.01.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கடம்பனேந்தலில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் கரூரில் ஒட்டலில்வேலை பார்த்து வருகிறார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.கடந்த 11.06.2018 தேதி மாலை சுமார் 5 மணியளவில் எதிரி ரத்தினம் என்பவர் எனது வீட்டு வாசலில் அவர்கள் வீட்டு வேலைக்காக மண் கொட்டிவைத்திருந்தார். அதற்கு எனது கணவர் எதிரி ரத்தினத்திடம் வீட்டு வாசலில் ஏன் மண் கொட்டி இருக்கிறீர்கள் கொஞ்சம் தள்ளி கொட்டிருக்கலாமே என சொல்லினார். நீ என்னடா கேக்குற

தேவிடியா பயலே என்று அசிங்கமாக பேசியது எனது காதில் விழுந்தது. நான் உடனே வெளியே வந்து ரத்தினத்தை பார்த்து எதற்காக இப்படி பேசுகிறிர்கள் என்று கேட்டதற்கு என்னை பார்த்து தேவிடியா முண்டை என்று என்னை அசிங்கமாக பேசினார். என்னை வலது கன்னத்தில் ஓங்கி அறைந்தார். இதைகேட்டு எனது மாமனார் அங்கு வந்தார். உடனே எதிரி பாகம்பிரியாள் என்னை முள்கம்பியை எடுத்து முதுகிலும் தொடையிலும் அடித்து ஊமைக்காயம் ஏற்படுத்தினார். நான் கீழே விழுந்துவிட்டேன். என்னை எனது கணவர் வந்து தூக்கும்போது எதிரி ராமசுந்தரி அவரை வலது பின்னங்காலில் கடித்து விட்டார். எனது மாமனாரையும் ஒரு இரும்பு கம்பியை எடுத்து தலையில் அடித்ததில் அவருக்கு மண்டை உடைந்து ரத்தம் வந்தது.

2. நாங்கள் சத்தம்போடுவதை கேட்டு பக்கத்திலிருந்து வேலுவும் , சின்னத்தம்பியும் எனது மாமனாரை தூக்கிவிட்டார்கள். அதன்பிறகு நானும் எனது மாமனாரும் திருவாடானை அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று விட்டு தேவகோட்டை பூமிநாதன் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு 4 நாட்கள் நாங்கள் மூன்று பேரும் சிகிச்சையில் இருந்தோம்.

3. மருத்துவமனையிலிருந்து வந்த பிறகு 15.06.2018 தேதி காலை சுமார் 10 மணியளவில் தொண்டி காவல்நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்கும்படி நான் புகார்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் அ.சா,ஆ.,1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அந்த புகாரை தொண்டியில் எனக்கு தெரிந்த ஒருவர் எழுதி கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனது சொந்த ஊர் கடம்பனேந்தல் ஆகும். நான் திருமணம் ஆன பிறகு கடம்பனேந்தலில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி 15 வருடங்கள் ஆகிறது. கடம்பனேந்தல் கிராமம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். கடம்பனேந்தலில் கிராமத்தில் எங்ககெல்லாம் பாதைகள் உள்ளது என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கின் எதிரிகளும் நாங்களும் உறவினர்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டின் வாசல் வடக்கு திசை பார்த்து அமைந்துள்ளது

என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டின் வாசல் தெற்கு திசை பார்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டின் முன்பு பொதுபாதை அமைந்துள்ளது என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. எதிரிகளின் வீட்டின் முன்பு உள்ள பாதை மண் பாதை என்றால் சரிதான்.

2. எதிரிகளின் வீட்டின் முன்பு 15 அடி அகலத்தில் பொது பாதை அமைந்துள்ளது என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதான சாலையிலிருந்து வரும்போது எங்கள் வீடு 4 வது வீடாக அமைந்துள்ளது. எங்கள் வீட்டை தாண்டி தான் எதிரிகளின் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான்.எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் முன் பிரச்சனை உள்ளதால் பேசி கொள்ளமாட்டோம் என்றால் நான் கடம்பனேந்தலில் வந்தலிலிருந்து எங்கள் குடும்பமும் எதிரிகள் குடும்பமும் பேசி கொள்ளவில்லை. எதிரிகள் வீட்டிற்கு செல்லாதபடி பாதையை அடைத்து வைத்ததாக எங்கள் மீது எதிரிகள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல.

3. வழக்கு சம்பவத்திற்கு முன்னதாகவே எங்கள்மீது எதிரிகள் மேற்படி புகார் கொடுத்து நாங்கள் காவல் நிலையம்சென்று பாதையை அடைக்கமாட்டோம் என எழுதிகொடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரி பாகம்பிரியாளை தாக்கி காயம் ஏற்படுத்தியதாக எங்கள் மீது குற்ற எண்.79/2018 ன் கீழ் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது பொய் வழக்காகும். எதிரிகளின் வீட்டிற்கு பிரதான சாலையிலிருந்து செல்லவேண்டுமஎன்றால் எங்கள் வீடடை தாண்டி தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு முன்பு பாதை அமைந்துள்ளது என்றால் சரிதான். எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் பாதைதொடர்பாக பிரச்சனை இருந்து வந்ததால் ஊரில் பஞ்சாயத்து செய்தார்கள் என்றும் அந்த பஞ்சாயத்திற்கு நாங்கள் கட்டுப்படவில்லை என்றால் சரியலல.

4. சாட்சி ஈஸ்வரன், கண்ணன், அழகு ஆகியோர் எனது உறவினர் என்றால் சரிதான். எங்கள வீட்டின் அருகே மாரிமுத்து, சரண்யா, ராமு ஆகியோர் வீடு உள்ளது என்றால் மாரிமுத்து, ராமு வீடு உள்ளது, சரண்யா வீடு எங்கள்வீட்டின் பின்னால் உள்ளது.

வழக்கு சமபவமானது உண்மையாக நடைபெற்று இருந்தால் மேற்படி மாரிமுத்து, சரண்யா ராமுவிற்கு தெரிந்திருக்கும் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் மேற்படி நபர்களுக்கு சம்பவம் குறித்து தெரியும் என்று தெரிவித்தேனா என்றால் சம்பவம் நடைபெற்ற சமயத்தில் மேற்படி நபர்கள் சம்பவயிடத்தில் இல்லை. மேற்படி நபர்களுக்கும் எங்களுக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்பதால் அவர்கள் சம்பவயிடத்தில் இல்லை என பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் காவல்நிலையத்தில் 15.06.2018 தேதி புகார் கொடுத்தேன். புகார் கொடுக்க ஏற்பட்ட காலதாமதத்திற்ககான காரணத்தை புகாரில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் குறிப்பிட்டுள்ளோம். புகார் மனுவினை போலிசார் எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. தொண்டி காவல்நிலையம் அருகே உள்ள ஒரு தனிநபர் எழுதினார். அவர் பெயர் எனக்கு தெரியாது. எனக்கு எழுதபடிக்க தெரியும். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.ஆ1 ல் இடம்பெற்றுள்ள எனது கையொப்பத்தின் கீழ் தேதியை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

6.காவல் நிலையத்தில் புகார் கொடுக்க நானும் எனது மாமனாரும் சென்றோம். எனது மாமனாரிடமிருந்து போலிசார் புகார்மனுவில் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை.நாங்கள் மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற விவரத்தை புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் குறிபபிட்டுளோம். எங்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பூமிநாதனை விசாரித்தால் தான் காயத்தை பற்றி தெரியும் என்றால் சரிதான். நாங்கள் எதிரிகளை தாக்கி காயம் ஏற்படுத்தி அவர்கள் எங்கள் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடு,த்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

7. எனது மாமனார் மற்றும் கணவரை தாக்க பயன்படுத்திய கம்பியை போலிசாரிடம் கொடுத்தோமா என்றால் இல்லை. ஆனால் போலிசாரிடம் காண்பித்தோம். மேற்படி கம்பியை போலிசார் வாங்கவில்லை. வழக்கு சம்பவம் உண்மையாக நடைறெவில்லை என்றும் அப்படி நடைற்றெு இருந்தால் கம்பியை போலிசார் வாங்கியிரு'ப்பார்கள் என்றால் சரியல்ல. எங்களுக்கும் எதிரிகளுக்கும் பொதுபாதை சம்மந்தமாக உள்ள

முன் பிரச்சனை மனதில் வத்து கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல., 1வது எதிரி என்னை அசிங்கமாக பேசி அடித்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றல் சரியல்ல. 2வ எதிரி எனது கணவரையும் மாமனாரையும் தாக்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3வது எதிரி வழக்கு சம்பவத்தில ஈடுபட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.